பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
26 05 2026 TUESDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு மத்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

- தமிழகத்தில் அனைத்து வகுப்புகளுக்கும் ஜூன் மாதம் 4ஆம் தேதி பள்ளி திறக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.

- கோவை, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கு மத்திய அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் எழுதிய மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கட்டுரையை, தமது சமூகவலைதளத்தில் பகிர்ந்து கொண்டுள்ள பிரதமர், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தர், திருவள்ளுவர், சுப்பிரமணிய பாரதியார் போன்றோர் நமக்கு அளித்துள்ள ஊக்கத்தை அடிப்படையாக கொண்டு, வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பாடுபடுவோம் என்றும் திரு. நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கு கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, எழுதியுள்ள கடிதத்தில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பையும், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையையும் மீறும் வகையில், காவிரி ஆற்றின் குறுக்கே, மேகதாது அணைக்கான பூமி பூஜை நடைபெறும் என்று கர்நாடக அரசு அறிவித்துள்ளது கவலை அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் படி, நீர்ப்பிடிப்பு பகுதியின் மேற்பகுதியில் அமைந்துள்ள மாநிலம், கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள மாநிலத்திற்கு திட்டமிட்டபடி வழங்க வேண்டிய நீர் விநியோகத்தை பாதிக்கும் வகையில் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கர்நாடக மாநிலம், ஒரு புதிய நீர்த் தேக்கத்தை காவிரியாற்றின் குறுக்கே கட்டுவதற்கு மேற்கொள்ளும் முயற்சி உச்சநீதிமன்ற தீர்ப்பின் மீதான ஒரு தெளிவான மீறலாகவே அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதுள்ள சுற்றுச் சூழல் சட்டங்களை ஒட்டுமொத்தமாக மீறும் வகையில் கர்நாடகம் மேகதாதுவில் அணை கட்டுவதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், மத்திய அரசின் நீர்வளத்துறை அமைச்சகம் மற்றும் மத்திய நீர்வள ஆணையம், தமிழக அரசின் கோரிக்கையை பரிசீலிக்காமலேயே மேகதாது திட்டத்திற்கான முன்மொழிவை பரிசீலித்து வருவது வியப்பளிப்பதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பை எவ்வகையிலும் மீறக்கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறும் திரு. விஜய், பிரதமருக்கு எழுதியுள்ளதாக கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

ஐந்து ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்கு பயிர்க் கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்ற வாக்குறுதியை த.வெ.க அரசு நிறைவேற்றவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள் சமூகவலைதளப் பதிவில், பயிர்க்கடன் தள்ளுபடி என்ற பெயரில் விவசாயிகளை அரசு ஏமாற்றியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது விவசாயிகளுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி என்றும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழகத்தில் நிகழ்ந்து வரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள் மீதான மக்களின் பார்வையை திசை திருப்பும் நோக்கிலேயே பயிர்க்கடன் தள்ளுபடி என்ற அறிவிப்பை ஆளும் த.வெ.க அரசு வெளியிட்டுள்ளதாக கூறியுள்ளார்.

கடந்த 2021ஆம் ஆண்டு தமது தலைமையிலான அஇஅதிமுக ஆட்சியின் போது, விவசாயிகள் வாங்கிய 12 ஆயிரத்து 110 கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்து, 16 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, பயிர்க்கடன் ரத்து என்ற பெயரில் மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கை, விவசாயிகள் பயனடையம் வகையில் இல்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பான மாநில அரசின் அறிவிப்பை இடதுசாரிக் கட்சிகளும் குறை கூறியுள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாய கடன்களுக்கான நிவாரணம், சாகுபடி நிலத்தின் அளவை அடிப்படையாக கொண்டே அமைய வேண்டும் என்றும், பண மதிப்பை அடிப்படையாக கொண்டு வெளியிடப்பட்டுள்ள புதிய அறிவிப்பு ஏற்கும் வகையில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 5 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடன் முழமையாக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ளவர்களுக்கு 50 சதவீத கடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து வகுப்புகளுக்கும் அடுத்த மாதம் 4ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அனைத்து வகுப்புகளுக்கும் ஒரே நாளில் நடப்பாண்டிற்கான பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினர் அளித்த கோரிக்கைகளை ஏற்று இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பள்ளித் திறப்புக்கு முன், அனைத்து மாவட்ட கல்வி அலுவலகர்களும் பள்ளிகளை திறப்பதற்கான ஏற்பாடுகளை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பெற்றோர், ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகத்தினர் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பு தருமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இசக்கி சுப்பையா இன்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

சட்டப்பேரவை தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகரிடம் அவர் தமது ராஜினாமா கடிதத்தை அளித்தார்.

அவரது ராஜினாமா ஏற்கப்பட்டதாக பேரவைத்தலைவர் அறிவித்தார்.

அஇஅதிமுகவிலிருந்து நேற்று தமது பதவியை ராஜினாமா செய்த மூன்று உறுப்பினர்கள் போட்டியிட்ட தொகுதிகளான மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம் ஆகியவை காலியாக உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களின் ராஜினாமா கடிதங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று அக்கட்சியின் கொறடா திரு. அக்ரி கிருஷ்ணமூர்த்தி, பேரவைத் தலைவரிடம் எழுத்துப்பூர்வமாக கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக அளித்த பட்டியலில் உள்ளவர்கள் மீது கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் படி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவர்களின் ராஜினாமாவை நேரடியாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் பேரவைத் தலைவரிடம் தாம் வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய பேரவைத் தலைவர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர் திரு. இசக்கி சுப்பையா அளித்துள்ள ராஜினாமா கடிதத்தை ஆய்வு செய்து, தாம் நடவடிக்கை எடுக்கப்போவதாக கூறினார்.

ராஜினாமா கடிதத்தை அளித்த திரு. இசக்கி சுப்பையா, மாநில அமைச்சர் திரு. ஆனந்தை இன்று சந்தித்தார்.

>>>>><<<<<

இந்நிலையில், ராஜினாமா செய்த அஇஅதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களை த.வெ.க-வில் இணைப்பது ஆரோக்கியமான அரசியல் இல்லை என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு. தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விமர்சனங்களுக்கு இடம்கொடுக்கும் வகையில் த.வெ.க. அரசு செயல்படக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

கோவை, திருப்பூர், திண்டுக்கல் உள்ளிட்ட 12 மாவட்டங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - துரை 44 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

சென்னை கோபாலபுரத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல அலுவலகத்தில் மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. பா. வெங்கடரமணன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<

தமிழ்நாடு கண்ணாடி இழை வலை அமைக்கும் நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. குமார் தலைமையில் சென்னையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

>>>>><<<<<

நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகே கடல்சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்து, கடலில் தத்தளித்த 3 மீனவர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஒருவரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

>>>>><<<<<

சென்னை ராயபுரம் பகுதியில் கடத்தப்பட்ட பெண் குழந்தையை, 5 மணி நேரத்தில் மீட்ட உதவி ஆணையர் தலைமையிலான தனிப்படை காவல்துறையினருக்கு சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் அமல்ராஜ், வெகுமதி வழங்கி பாராட்டினார்.

>>>>><<<<<

திருவாரூர் மாவட்டம், ஆலங்குடி அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோவிலில் குருப்பெயர்ச்சி விழா இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-17, 21-18 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Putri Wardani-யை வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் – சிராக் ஷெட்டி இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது

>>>>><<<<<

மால்டோவா சர்வதேச சேலஞ்ச் டென்னிஸ் போட்டியின் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-2 என்ற செட்கணக்கில் உஸ்பெகிஸ்தானின் Sergey Fomin-ஐ வென்றார்.

>>>>><<<<<

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள முதலாவது Qualifier ஆட்டத்தில் பெங்களூரு அணி - குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

தரம்சாலாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>END<<<<<